திரு. டி. மார்டின் : இந்த வண்டிகளில் உள்ள மீட்டர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதமான ரேட்டைக் காண்பிக்கிறது. ஆகவே இந்த வண்டிகளில் உள்ள மீட்டர்களை எல்லாம் ஒழுங்கு செய்து எல்லாம் ஒரேவிதமான ரேட்டைக் காண்பிக்கும்படியாக ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. எஸ். ஜே. சாதிக் பாட்சா : மூலக்கேள்விக்குத் தொடர்புடையதாக இல்லை.

Bus Stand at Esplanade

* 222 Q.—THIRU K. VINAYAKAM : (On behalf of DR. H. V. HANDE) : Will the Hon. the Minister for Local Administration be pleased to state whether the Corporation of Madras propose to reconstruct the bus stand in Esplanade, Madras (near the Corporation fruit market)?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : ஆம்.

திரு. கே. விநாயகம் : ஆம் என்றால் எப்போது எடுத்துக் கொள்ளப்படும்? எவ்வளவு செலவாகும்? எத்தனை வண்டிகள் நிறுத்தப்படுவதற்கு வசதி உடையதாக இருக்கும்? இப்போது இருக்கிற இடம் நெருக்கடியானதாக இருக்கிறது என்பதற்காக வேறு இடத்தில்—நந்தனத்தில் ஏற்படுத்தவேண்டும் என்கிற சிபார்சு செய்யப்பட்டதே—அந்தக் குழுவில் நானும் இருந்தேன்—அது கைவிடப்பட்டதா? இப்போது எந்த இடத்தில் அமைப்பதாக அரசு உத்தேசித்திருக்கிறது ?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி : தலைவர் அவர்களே, வெளியூர் பேருந்து நிலையத்தை ரூபாய் 7.95 லட்சம் செலவு மதிப்பீட்டில் மேம்படுத்துவதற்கு சென்னை மாநகராட்சி ஆணையாளரால் தயாரிக்கப்பட்ட வரைப்படங்கள், மதிப்பீடுகள் ஆகியவற்றுக்கு 9—1—1961 அன்று நடைபெற்ற மாநகராட்சி மன்றக் கூட்டத்தில் ஒப்பளிப்பு வழக்கப்பட்டது. இதற்கான கடன் கோரிக்கைக்கு ஒப்பளிப்பு வழங்கும் பொருட்டு இத் திட்டம் அரசுக்கு அனுப்பப்பட்டது. மாநகரில் உள்ள பேருந்து நிலையங்கள்,ப் அங்காடிகள் ஆகியவற்றின் மேம்பாடுகளைக் கருதுவதற்கு 14—9—1964 அன்று தலைமைச் செயலகத்தில் நடைபெற்ற கூட்டத்தில் "ராமசாமி குழு" என்று விசாரணைக் குழு அமைக்கப்பட்டது. கிராம வளர்ச்சி உள்ளாட்சி நிர்வாகத்துறை செயலாளரின் அறையில் நடைபெற்ற விவாதத்தை ஒட்டி வெளியூர் பேருந்து நிலை திட்ட விவரங்கள் அடங்கிய செயற் குறிப்பு ஒன்று கோடு வரையுடன் தயாரிக்கப்பட்டிருக்கிறது, செயலாளரின் பார்வைக்காகவும், கடன் வழங்குவதற்காகவும், அரசின் ஒப்புதலைப் பெறுவதற்காகவும் அனுப்பப்பட்டது. அப்போது முதல் அமைச்சராக இருந்த அறிஞர் அண்ணா அவர்களுக்கு சிறப்பு ஆலோசகராக இருந்த

1970 மார்ச் 5]

திரு. என். முருகேச முதலியார் மாநகராட்சியின் செயற் குறிப்பில் சில திருத்தங்களையும், மாற்றங்களையும் செய்யலாம் எனக் கருத்துத் தெரிவித்தார். அதற்கிணங்க தற்போது வரைபடங்களும் மதிப்பீடுகளும் சென்னை மாநகராட்சியால் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

திரு. கே. பி. எஸ். மணி: சார், இந்தப் பேருந்து நிலையம் கட்டுவதற்கான இடம் நினைக்கிறபடி அதிகமாக இல்லாததால் அன்டர்கிரவுண்ட் கட்டடமாகக் கட்டுவதற்கு ஆரம்பக் காலத்திலேயே வழிவகைகள் செய்ய அரசாங்கம் முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதுபற்றிய செயற்குறிப்பு எதுவும் தற்போது இல்லை.

திரு. ஏ. சி. நரசிம்மன்: தலைவர் அவர்களே, இப்பொழுதுள்ள மாநகராட்சி பஸ் நிலையத்திலே ஒரு ஏழடுக்கு மாளிகைபோன்ற வசதியான பஸ் ஸ்டாண்ட் அமைப்பதாக ஒரு உத்தேச வரைப்படம் கூட இரண்டு ஆண்டுகளுக்கு முன்னால் பத்திரிகையிலே வந்தது. அதை அரசு செயல்படுத்த இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: அதுபற்றிய விவரம் என்னிடத்திலே இல்லை.

திரு. கே. விநாயகம்: இப்பொழுதிருக்கிற எஸ்பிளனேட் பஸ் ஸ்டாண்ட் ரொம்பவும் சிறிய இடம். என்னதான் நாம் அதை அபிவிருத்தி செய்தாலும் நாம் விரும்புகின்ற அளவுக்கு ஏற்படுத்த முடியாது என்ற கருத்துப்படி அதே கமிட்டி, அதாவது வி. வி. ராமசாமி நாடார் தலைமையிலே வந்த கமிட்டியும் ஐலண்ட் கிரவுண்டில் நிறைய இடம் இருக்கிறது, அதை அதற்காகப் பயன்படுத்தலாம் என்று யோசனை சொன்னார்களே, அதை அரசாங்கம் விட்டு விட்டதா? அந்த அடிப்படையிலே கார்ப்பரேஷனுடைய அபிப்பிராயம் என்ன?

மாண்புமிகு திரு மா. முத்துசாமி: ஏற்கனவே நான் சொன்ன குறிப்புகளைத் தவிர வேறு விவரங்கள் என்னிடத்தில் இல்லை. தனிக் கேள்வி போட்டால் விவரங்கள் சேகரித்துத் தரப்படும்.

திரு. வி. கே. கோதண்டராமன்: சார், 1962-லே ஆரம்பித்து 1970-க்கு வந்திருக்கிறோம். புதிய அரசு வந்து 3 வருடங்கள் ஆகின்றன. விரைவில், விரைவில் என்றால் ஆறு மாதம் ஆகுமா அல்லது ஆறு வருடம் ஆகுமா, இல்லை, எத்தனை வருடம் என்று சொல்ல வேண்டும். காங்கிரஸ் ஆட்சிக் காலத்திலே வெளிநாட்டிலிருந்து வருகிறவர்களுக்குக் கண்காட்சி சாலையாக அதை வைத்திருந்தார்கள். இப்பொழுது . . .

மாண்புமிகு பேரவைத் தலைவர்: கேள்வியிலே இம்மாதிரி யெல்லாம் பேசக்கூடாது என்று சொல்லியிருந்தும் மறுபடியும் மறுபடியும் பேசினால் எப்படி?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: தலைவர் அவர்களே, பேருந்து நிலையம் இருக்கக்கூடிய இடமானது நகரத்திலே மிகவும் முக்கியமான பகுதியிலே இருக்கக்கூடியது. அதை வெளியேற்று வதால் பல சங்கடங்கள் ஏற்படும் என்று அவ்வப்போது சுட்டிக் காட்டப்பட்டிருக்கிறது. தனித் தனி இடங்களில் பேருந்து நிலையங்களை வைப்பது வேறு ஒரு காரியம். அப்படி அப்படியே மாற்றங்களைச் செய்யலாமா என்பதைப் பற்றியெல்லாம் ஆராய்வ தற்காக குழுக்கள் நியமிக்கப்பட்டு அவர்கள் கருத்துக்கள் தெரிவிக் கின்றார்கள். அதற்குப் பின்னால் சில கருத்துக்களை மாநகராட்சி தெரிவித்திருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவலைப் படுகின்ற அளவுக்கு நீண்ட நாட்கள் எடுத்துக் கொள்ளாது விரைவிலே நடவடிக்கை எடுத்துக் கொள்ளப்படும். இதிலே இருக்கிற சங்கடச் சூழ்நிலையினால்தான் வேலை தடைபடுகிறதே தவிர அரசாங்கத்தினுடைய கவனக் குறைவினால் இல்லை என் பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. எம். ஆர். கண்ணன்: தலைவர் அவர்களே, வடசென்னையில் தங்கசாலையில் பேருந்து நிலையத்திற்காக கார்ப்பரேஷன் முயற்சி செய்கிறது. இப்பொழுது அங்கேயுள்ள பேருந்து நிலையத்தில் போதிய இடம் இல்லாததால் பேருந்துகள் எல்லாம் வெளியிலே நிற்கின்றன. அதைப் பற்றி ஆராய்ந்து நடவடிக்கை எடுக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மா. முத்துசாமி: கேள்வி எஸ்பிளனேட் பேருந்து நிலையத்தைப் பற்றியது. தங்கசாலை எந்த அளவிலே இருக்கிறது என்பதை பற்றிய விவரம் தற்பொழுது என்னிடத் திலே இல்லை.

Sethusamudram Project

• 223 Q.—THIRU G. GOMATHYSANKARA DIKSHIDAR: Will the Hon. the Minister for Co-operation be pleased to state—

(*a*) whether any specific request has been made by the Government for inclusion of the Sethusamudram Project in the Fourth Plan; and

(*b*) if not, the reasons therefor?

மாண்புமிகு திரு. சி. பா. ஆதித்தனார்:

(அ) ஆம்.

(இ) இவ்வினாவிற்கு இடமில்லை.

திரு. க. கோமதிசங்கர தீட்சிதர்: தலைவர் அவர்களே, இந்த சேதுசமுத்திரத் திட்டம் நம்முடைய நாட்டிற்கு அதிலும் குறிப் பாக நம்முடைய தமிழ் நாட்டிற்கு பாதுகாப்பு போன்ற நன்மை களை அளிக்கவல்லதால் அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்கு இந்த அரசாங்கம் தீவிரமாக நடவடிக்கை எடுக்க முன்வருமா?